செ.வெ.எண்:36 நாள்:24.07.2020

# பத்திரிக்கைச் செய்தி

## ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் பணிக்கு செல்லும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத்திட்டம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வேலைக்கு செல்லும் பெண்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசால் **2017–2018** ஆம் ஆண்டு முதல் **அம்மா இருசக்கர வாகனத்திட்டம்** எனும் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பெண்கள் தாங்கள் பணிபுரியும் இடத்திற்கு எளிதாக சென்று வரவும், வங்கிகள் மற்றும் இதர இடங்களுக்கு அலுவல் தொடர்பாக சென்று வர ஏதுவாக புதிய இருசக்கர வாகனம் **50** சதவிகித மானியத்தில் வாங்குவதற்காக **28.08.2020** வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. எனவே கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேலைக்கு செல்லும் மகளிரும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொண்டு **28.08.2020** அன்று மாலை **5.00** மணிக்குள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி மற்றும் நகராட்சி அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ தங்களது விண்ணப்பங்களை அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் வசிக்கும் **18** முதல் **45** வயது வரை உள்ள , பணிக்குசெல்லும் (அ) சுயதொழில் புரியும், இருசக்கர வாகன பயிற்றுநர் / ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள, ஆண்டு வருமானம் ரூ.**2,50,000/–** வரையுள்ள, மகளிர் மற்றும் திருநங்கைகள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கலாம். மகளிரை குடும்ப தலைவராக கொண்ட குடும்பம், ஆதரவற்ற மகளிர், மாற்றுதிறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், **35** வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், திருநங்கைகள் மற்றும் மலைபாங்கான / தொலைதுரரங்களில் வசிக்கும் பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். மகளிரை குடும்ப தலைவராக கொண்ட குடும்பம், ஆதரவற்ற மகளிர், மாற்றுதிறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், **35** வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், திருநங்கைகள் மற்றும் மலைபாங்கான / தொலைதுரரங்களில் வசிக்கும் பெண்கள். அரசு உதவி பெறும் நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்கள் / அரசு திட்டங்கள் / சமூக அடிப்படையிலான அமைப்புகள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் / கிராம வறுமை ஒழிப்புசங்கங்கள் / மாவட்ட

மக்கள் கற்றல் மையங்களில் ( முகமை ) ஒருங்கிணைந்த ஊதியம், தினசரி ஊதியம் அல்லது ஒப்பந்த பணியாளராக பணிபுரியும் பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியானவர்கள் ஆவர். இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக மானியம் ரூ. 25,000/– அல்லது வாகன விலையில் 50 சதவிகிதம் (வாகன அடிப்படை விலை, வரி, காப்பீடு) ஆகிய இவ்விரண்டில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். மாற்றுதிறனாளிகளுக்குரிய மூன்று சக்கரவாகனத்திற்கு( Retrofitted ) மானியத்தொகை ரூ.31,250/– வழங்கப்படும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் இன்று முதல் 28.08.2020 மாலை 5.00 மணி வரை அவரவர் பகுதிகளுக்குட்பட்ட நகராட்சி / பேரூராட்சி / ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் விண்ணப்பங்களை பெற்று உரிய விவரங்களை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவணங்கள் இணைத்து விண்ணப்பித்து பயனடையும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒரு குடும்பத்தில் ஒரு பயனாளி மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே விண்ணப்பித்த நபர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை. மேலும் விவரங்களுக்கு நகராட்சி / பேரூராட்சி / ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் (அல்லது) www.tamilnadumahalir.org /tnatws.html என்ற இணையதளத்தை அணுகவும்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்